**35 தண்ணீர் பந்தல்வைத்த படலம்**

இராஜேந்திர பாண்டியன் செங்கோல் ஆட்சி செய்யும் காலத்தில் காடு வெட்டி சோழன் வெளிப்படையாகவே சோமசுந்தர்ரை வணங்க எண் ணி, பாண்டியனின் நட்பைப் பெற்றிட தன் மகளைஇராஜேந்திரனுக்கு திருமணம் செய்துக் கொடுக்க எண்ணம் கொண்டான். வஞ்சக நெஞ்சம் கொண்ட அவன் தம்பியான அரச்சிங்கன் தமயனை வஞ்சித்து அவனுக்குப் பேசிய சோழன்மகளை தானே மணந்தான்.

காடு வெட்டி சோழன் தன் மருமகனே நாட்டையாள வேண்டும் என்ற ஆசையில் தன் மருமகன் துணைக் கொண்டு பாண்டியன் மீது படை எடுத்தான். இதனை அறிந்த பாண்டியன் சோமசுந்தரர் திருவடிகளை வணங்கி அன்று சோழனின் வேண்டுதலுக்கு இசைந்து அவனை அழைத்து வந்து தரிசிக்க வைத்ததை நினைவு கூர்ந்தான். இப்போது தனது தம்பியுடன் பகைவனாய் படையெடுத்து வந்துள்ளதைக் கூறி, அவனுக்கு துணை போவது நியாயமா என்று வருந்தினான். ஐயன் மறுநாள் சோழனைப் போருக்கு வருமாறு அழைக்கும் படி கூறி, எப்படியும் வெற்றி பாண்டியனுடையதே என்று கூறினார்.

மறுநாள் பாண்டியனும் சோழனும் கடும் போர் புரிந்தனர். அப்போது வேனிற் காலம் ஆகையால் நீர் நிலைகள் வற்றின. இரு சேனைகளும் நீர் வேட்கையால் வாடித் தவித்தனர். இவ்வாறு அனைவரும் வருந்தும் சமயத்தில் கூடற்பெருமாள் இராஜேந்திரன் படை இருக்கும் இடத்தில் நான்கு வேதங்களும் நான்கு தூண்களாக பொருந்தியஒருதண்ணீர் பந்தல் அமைக்கும்படி கட்டளையிட்டார். அதன் கீழ்சிவகோலம் பூண்டு அனைவருக்கும்தாகத்தை தீர்த்து அருளினார்.

தாகம் தீர்ந்தவுடன் பாண்டியன் படை வீரர்கள் புத்துணர்ச்சியுடன் போரிட சோழர் படை புறமுதுகிட்டோடியது. வெற்றி பெற்ற பாண்டியன் ஐயனிடம் தான் என்ன செய்யட்டும் என வேண்டினான். ஐயனும் அவனுக்கு இசைந்ததை செய்யுமாறு பணித்தார்.

தஞ்சமடைந்த சோழனுக்கு பரிசு பொருள்கள் கொடுத்து அனுப்பி வைத்தான் பாண்டியன். அரசச்சிங்கனின் ஆணவம் நீங்க அவனை ஒதுக்கிவைத்தான். இராஜேந்திரன் இவ்வாறு எல்லோருக்கும் நல்லவனாய் வாழ்ந்து வந்தான்.

**பல்லவி**

அண்ணனுக்குப் பதிலாய் தம்பிக்கு தன் பெண்ணை
மண முடித்து வைத்தான் காடுவெட்டி சோழன்

**அனுபல்லவி**

மண்ணையும் தன் மருமகனே ஆண்டிட
எண்ணம் கொண்ட சோழன் பாண்டியன் மேல் போர் தொடுத்தான்

**சரணம்**

தஞ்சமென்றடைந்த இராசேந்திர பாண்டியனுக்கு
அஞ்சேல் என்ற சொல்லி அபயம் தந்தருளினீர்
வெஞ்சமரில் சேர்ந்த வீரர்களுக்கு தண்ணீர்
பந்தல் வைத்துதாக சாந்தி செய்தீர்